**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 101 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 19** |
| **Name** | : | **Dr. திரு. ஜெயக்குமார்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.10.2023**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மூளை நரம்பியல் தலைக்காயப்பிரிவில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிந்த வருகிறேன். கடந்த 16.01.2016 ம் தேதியன்று மதியம் சுமார் 02.55 மணியளவில் நான் தலைக்காயப்பிரிவு வார்டு எண். 101 ல் பணியில் இருந்த போது, புது ராம்நாட் ரோடு, பழைய மீனாட்சி நகர், மகாத்மா காந்தி தெருவைச் சார்ந்த, திருமதி.ரோசி, வயது 21, க/பெ.வெனீஸ் என்பவர் தலைக்காயங்களுடன் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவரை அவரது மாமனார் அலெக்சாண்டர் என்பவர் சிகிச்சைக்காக உள்நோயாளியாக சேர்த்தார். அப்போது அவர், நோயாளி தனது வீட்டில் படிக்கட்டில் தவறி விழுந்து ஒரு அலுமினிய பக்கெட்டில் தலை இடித்ததினால் ஏற்பட்ட காயம் என்று கூறினார். மேலும் நோயாளியைப் பரிசோதித்துப் பார்த்தபோது, அவர் சுயநினைவின்றி காணப்பட்டார். கோமா நிலையில் இருந்தார். அவருக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன :

1) தலையின் இடது பக்கவாட்டில் 2 x 2 x 1 செமீ அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது.
2) தலையின் பின்புறத்தில் 3 x 2 x 1 செமீ அளவிலான ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. இந்த காயத்தின் உள்ளே மண்டைஓடு உடைந்து காணப்பட்டது.

மேற்கூறிய காயங்களுக்கு முதலுதவி அளித்து தலைக்காய தீவிர சிகிச்சைப் பிரிவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. நோயாளி 27.01.2016 ம் தேதியன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். சம்பந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

அவசர சிகிச்சைப்பிரிவில் உள்ள மருத்துவர் தான் முதலில் நோயாளியைப் பார்த்து சிகிச்சைக்கு அனுப்பி வைப்பார் என்றால் சரிதான். அவசர சிகிச்சைப் பிரிவு மருத்துவர் தான் விபத்துப் பதிவேட்டில் பதிவு செய்து, நேரடியாக சிகிச்சைக்கு வந்துவிட்டால் உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிப்பார் என்றால் சரிதான். நோயாளி வார்டுக்கு வந்து சேர்ந்தவுடன் அவருக்கு காயத்திற்காக நுண்கதிர்படமும், scan ம் எடுக்கப்படும் என்றால் சரிதான். அந்த நுண்கதிர்படமும், scan ஐயும் பார்த்தால், சிகிச்சைக்கு முன் அவரது கபாலத்தின் நிலை தெரியவரும் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் நான் சிகிச்சை அளித்தேன் என்றால் சரிதான். 11 நாட்கள் இறந்த நபருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்த 11 நாட்களில் நோயாளியின் நிலை என்ன என்றும், அவருக்கு சுய நினைவு திரும்பியதா இல்லையா என்ற விபரம் case sheet ஐப் பார்த்தால் தெரியும் என்று சொன்னால் சரிதான். தலைக்காயம் பட்ட நபருக்கு சுயநினைவு திரும்பிவிட்டால், அவரிடம் வாக்மூலம் பதிவு செய்வதற்காக

நீதித்துறை நடுவருக்குத் தகவல் தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் இறந்தவுடன் அதுபற்றிய death intimation கொடுக்கப்படும் என்றால் சரிதான். கிழிந்த காயத்திற்கும், சிதைந்த காயத்திற்கும் சிறாய்ப்பு காயத்திற்கும் வித்யாசம் உண்டு என்றும் அதன் வித்யாசம் தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் சொன்னது போல் இறந்தநபருக்கு காயங்களின் தன்மை இல்லை என்றும் அவருக்கு சரியானபடி சிகிச்சை அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை